BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் சமயத்தில் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல உதவுவதற்காக நகர நிர்வாகம் புதிய டிஜிட்டல் கருவிகளை அறிமுகம் செய்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 24, 2020) – கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் சமயத்தில் தன்னுடைய நகர திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கான துறையில், வளர்ச்சிக்கான திட்டப்பணிகள் முன்னேறிச்செல்ல உதவுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது புதுமையான புதிய செய்முறைகள் மற்றும் கருவிகளை அறிமுகம் செய்துள்ளது: அதே சமயத்தில் தனது குடியிருப்பு வாசிகள் மற்றும் பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினையும் பாதுகாக்கிறது.

நகர வளர்ச்சிக்கான கட்டுமான தொழில் முனைபவர்கள் இப்போது மின்னணுரீதியாகவே நகர் வளர்ச்சி தொடர்பான அனைத்து விண்ணப்பங்களையும்  நகரின் வலைத்தளத்தில் சமர்ப்பிக்கலாம்; இதில் உப பிரிவுக்கான வரைபடங்கள், மண்டலம் மறு வரைவு மற்றும் மனையிட வரைபடங்கள் ஆகியவையும் அடங்கும். இந்த முறையானது மார்ச் 20 ஆம் தேதி கொண்டுவரப்பட்டதிலிருந்து நகர நிர்வாகத்திற்கு 25 புதிய விண்ணப்பங்கள் வந்துள்ளன. இப்படி விண்ணப்பித்தோருடன் தொலைபேசி வழி வீடியோ மாநாடு உபயோகித்து பணியாளர்கள், எட்ட இருந்தபடியே அனைத்து விண்ணப்பங்களையும் செயல்முறைப்படுத்த இயன்றது.

ஏப்ரல் 20 ஆம் தேதி வாக்கில், குடியிருப்பு கட்டிட அனுமதிகளுக்கான விண்ணப்பங்களையும் கூட மின்னணுரீதியாக சமர்ப்பிக்கலாம்.  மக்கள் குடியிருந்து வரும் கட்டிடங்களுக்கான ஆய்வுகளையும் (இரண்டாவது அலகுகள் உள்பட) கட்டிடப் பிரிவுப் பணியாளர்கள் நிகழ்நிலையில் செய்து வருகின்றனர். மிகப்பெரும் தொழில், வணிக மற்றும் கல்வி/மருத்துவ நிறுவனங்களுக்கான (ICI) விண்ணப்பங்கள் தொடர்ந்து நேரில் பெறப்படும்.

பல்வேறு வளர்ச்சிப்பணிகளுக்கு அலுவலர்கள் ஒப்புதல்களை வழங்கிவிட்டனர் மற்றும் கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் சமயத்திலேயே பின் வரும் குறிப்பிடத்தக்க திட்டப்பணிகளில் தொடர்ந்து வேலை செய்து வருகின்றனர். அவற்றில் அடங்குபவை:

- சுமார் 22,000 சதுர மீட்டர் பரப்பளவில் பணியமர்வு துறைக்கான கட்டிட ஒப்புதல்கள் மற்றும் 800 குடியிருப்பு வீடுகளுக்கான அனுமதிகள்.
- நகரின் தலைமை கட்டுமானத்துறை அதிகாரி அவர்கள், மேப்பிள் லாட்ஜ் ஃபார்ம்ஸ் நிறுவனத்திற்கு ஒரு கட்டிட அனுமதியை வழங்கினார்; இது 250 பேருக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கியது.
- ஷாப்பர்ஸ் வோர்ல்ட் ரீடிவலப்மெண்ட் (The Shoppers World redevelopment (RioCan)) நிறுவனமானது, தனது கட்டுமான தளத்தை 5000 க்கும் மேலான குடியிருப்பு அலகுகள் கொண்டபடி புதியதொரு கலப்பு-உபயோக நகர்ப்புற சமுதாயத்தை உருவாக்க மாற்றங்கள் செய்ய முனைந்து வருகிறது.

நகர நிர்வாகமானது, 2019 ஆம் ஆண்டில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வழங்கிய கட்டிட அனுமதிகளைக் காட்டிலும் இந்த ஆண்டில் அதே மாதங்களில் 34 சதவீதம் அதிக அனுமதிகளை வழங்கியிருக்கிறது. அனுமதி வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க திட்டப்பணிகளில் சில:

- மேப்பிள் லாட்ஜ் ஃபார்ம்ஸ் – கட்டுமான மதிப்பு $2.5 மில்லியன்
- ஷெல், 6475 மேஃபீல்ட் ரோட் – கட்டுமான மதிப்பு $2.95 மில்லியன்
- 17 நைட்ப்ரிட்ஜ் ரோட் – கட்டுமான மதிப்பு $1.2 மில்லியன்
- 1 நைட்ப்ரிட்ஜ் ரோட் – கட்டுமான மதிப்பு $500,000

கோவிட் -19 (COVID-19) தொற்றுப்பரவலுக்கு எதிராக சமுதாயத்தினருக்கு ஆதரவளிக்கின்ற நகர நிர்வாகத்தின் முயற்சிகள் பற்றிய மேலும் அதிக தகவல்களுக்கு வருகை தரவும் www.brampton.ca/COVID19 அல்லது டுவிட்டர், ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்ட்டாகிராம் ஆகியவற்றை @CityBrampton இல் பின்பற்றவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"நன்கு நிர்வகிக்கப்பட்டு வரும் ஒரு மாநகரமாக, ப்ராம்ப்ட்டன் நகரின் வணிகத்தை முன்னெடுத்துச் செல்ல வைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்; அதே சமய்த்தில் நமது சமூகத்தினரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பையும் போற்றிக்காக்கின்ற கடமையையும் கொண்டிருக்கிறோம். இந்தப் புதுமையான செய்முறைகள் மற்றும் அதற்கான கருவிகள் – நகரின் கட்டுமானத்தை தொடர்ந்து செய்து புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் கோவிட் 19 தொற்று பரவல் காலத்தில் உடல்ரீதியான சமூக இடைவெளிவிடுதல் - ஆகிய இவ்விரண்டையும் மேற்கொள்ள நமக்கு உதவும்."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நகரின் கட்டிட வசதியமைப்புக்கள் மூடப்பட்டிருக்கும் வேளையில், வணிகங்கள் அதன் போக்கில் முன்னேறிச்செல்வதற்கான மாற்று வழிகளில் செல்ல, நகர் மன்றமும் அதன் பணியாளர்களும் அயராது பாடுபடுகின்றனர். திட்டமிடல் துறையில் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்கள் ப்ராம்ப்ட்டன் வணிகங்களுக்கு திறம்பட சேவையாற்றும், உள்ளூர்ப் பொருளாதாரத்திற்கு ஆதரவு தரும் மற்றும் பணியாளர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளை பாதுகாப்பாக வைக்கும்."

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக் குழு*

"இந்த சவாலான நேரத்தில், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்துகின்ற நாங்கள், நகரின் வளர்ச்சியிலும் கவனம் குவித்தபடியே இருக்கிறோம். சேவைகளை வழங்க புதுப்புது வழிகளைக்

கையாளுவதன் காரணமாக, கட்டுமான தொழிலதிபர்களுக்கு விருப்பமான ஒரு சேரிடமாக ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து இருந்துவரும்."

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 7 & 8; துணைத்தலைவர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்குழு*

"இந்த சவாலான சமயத்தில் திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை, புதிய மற்றும் பாதுகாப்பான வழிகள் மூலமாக கொண்டு சேர்ப்பதில், ப்ராம்ப்ட்டன் நகர பணியாளர்களாகிய நாங்கள் எங்கள் அர்ப்பணிப்பைச் செய்ய ஒன்றாக இணைந்துள்ளோம். திட்டமிடல் துறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள செய்முறைகள் மற்றும் கருவிகள் ஆகியவை, கட்டுமான வளர்ச்சிக் குழுவிற்கு தொடர்ந்து சேவை செய்ய எங்களுக்கு உதவும்; அதே சமயத்தில் இந்த அவசர நிலை காலத்தில் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்தைக் காத்தபடியும் இருக்கும்."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*